


**பாசம், காதல், சோகம், ரவுத்திரம், ஆட்டம் என அத்தனை மனித உணர்வுகளையும் இசை மூலம் கொண்டு வரமுடியும். மகத்துவமிக்க இசையை ரசிக்க பெரிய அறிவு தேவையில்லை. காற்றைப்போல இசையையும் உணர்ந்தால் போதும். மனதிற்குள் இசையை உணர ஆரம்பித்தால் எந்த மாதிரியான இசையையும் ஏற்றுக்கொள்வோம். என் மனதிற்கு பிடித்தமான கிடார் இசையை ரசிகர்களுக்கு வழங்கி வருகிறேன்“ என கிடாரை அணைத்தபடியே பேசத்துவங்கினார் கிடாரிஸ்ட் ரமேஷ். 46 வயதான இவர், இந்த வாரம் தினகரன் 'கோவை வுட்' பகுதிக்காக அவர் தனது இசை அனுபவங்களை நம்மிடையே பகிர்ந்துகொண்டார். அதன் விவரம் இங்கே...**

**கிடார் பந்தத்தின் துவக்கம்..?**

மொட்டை மாடியில் துணிகளை காயப்போடும் கம்பியை பிடித்து தொங்கி விளையாடிக்கொண்டிருந்தேன். கம்பியில் கைவிரல்பட்டு வித்தியாசமான ஒலி எழும்பியது. கையின் அசைவுக்கு ஏற்ப ஒலி மாறிக்கொண்டே இருந்தது. இந்த ஒலி என்னுள் பரவசத்தை தந்தது. அப்பாவிடம் கிடார் கேட்டு அடம்பிடித்து வாங்கிக்கொண்டேன். ரேடியோவில் தியாகராஜ பாகவதர் பாடல்களை கேட்டு, கிடாரில் வாசிக்க முயற்சி செய்வேன். ஓரளவுக்கு வாசிக்க கற்றுக்கொண்டேன். நாளொன்றுக்கு 10 முதல் 14 மணிநேரம் வரை பயிற்சி எடுப்பேன். நான் வாசிப்பதை இசை குறிப்பு எடுப்பதற்காக மட்டும் மூன்று மாதம் ஸ்டான்லி ஜோசப் மாஸ்டரிடம் பயிற்சி எடுத்தேன். 14 வயதில் மடியில் தவழ துவங்கிய கிடார், இன்றுவரை என்னோடு தொடர்கிறது. இசை உலகில் எனக்கென தனி அடையாளத்தையும் பெற்றுத் தந்துள்ளது.

**கிடார் இசையில் சொந்த முயற்சிகள்..?**

நம் நாட்டின் சங்கீதத்தையும், மேல் நாட்டின் இசையையும் இணைத்து புதுப்பாணியில் இசையை கிடாரில் கொண்டு வருகிறேன். இசை என்பது காற்றுபோல. வாழ்வில் கடந்துபோகும் சம்பவங்கள், பார்க்கும் புகைப்படங்கள், படிக்கும் கதைகள் என ஒவ்வொரு விஷயங்களில் இருந்தும் புதிய இசையை தேடுகிறேன். மனதில் தோன்றுவதை எழுதி வாசிக்கிறேன். ஒரு முறை காரைக்குடியில் உள்ள மாணிக்க வாசனார் ஆவடையார் கோயிலுக்கு சென்றேன். கோயிலில் எடுத்த புகைப்படத்தை பார்க்கும்போது, 7ம் நூற்றாண்டில் இசைக்குழு இருந்தால் எப்படி வாசித்து இருப்பார்கள் என கற்பனை செய்து கிடாரில் வாசித்தேன். கிடார் இசையில் பட்டாசு வெடிச்சத்தத்தை கொண்டு வந்தேன். 72 மேளகர்தா ராகங்களை கிடாரில் வாசித்திருக்கிறேன். இதுபோன்று கிடார் இசையில் புதிய முயற்சிகளை எடுத்து வருகிறேன். இந்த முயற்சிகளை மேடை நிகழ்ச்சி மூலம் வெளிப்படுத்தி வருகிறேன்.

**நீங்கள் உருவாக்கும் கிடார் இசைக்கு மக்களின் ஆதரவு..?**

இதுவரை 500க்கும் மேற்பட்ட இசை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளேன். ஆடியன்ஸை பொறுத்து இசை வாசிப்பதை திட்டமிடுவேன். வழக்கமான கிட்டார் இசையை வாசிக்காமல், நான் உருவாக்கிய இசையை வாசிக்கவே முன்னுரிமை அளிப்பேன். என்ன வாசிக்க போகிறேன் என்பதை முன்கூட்டியே சொல்லி வாசிக்கும்போது, மக்கள் உணர்ந்து கைத்தட்டுவர். அவ்வப்போது அதிகம் பிரபலமான பக்தி பாடல்களையும் வாசித்து, இசை ரசிகர்களை சுறுசுறுப்போடு வைத்துக்கொள்வேன். கேட்ட பாடல்களில் கிடைக்கும் சந்தோஷம் இல்லை என்றாலும், சொந்த முயற்சி இசையை 'என்ஜாய்' பண்ணி ரசிக்கிறார்கள். ஆடியன்ஸ் கேட்டால் சினிமாவில் நல்ல தரமான பாடல்களையும் வாசித்து காட்டுகிறேன். மேடை நிகழ்ச்சியில் நேரடியாக வாசிக்கும் சுகம் எங்கும் கிடைக்காது. மேடையில் கிடைக்கும் திருப்தி, ஆயிரம் சினிமா பாடல்களில்கூட கிடைக்காது.

**சினிமாவுக்கு இசையமைக்க திட்டம் இல்லையா..?**

இசையமைப்பாளர் எம்.எஸ்.விஸ்வநாதன் 'சினிமாவுக்கு வா' என அன்போடு அழைத்தார். ஆனால் மறுத்துவிட்டேன். ஒரு வரையறைக்குள் மாட்டிக்கொண்டு சினிமா பாடல்களை உருவாக்க மனசு ஒத்துக்கல. அதனால சினிமா பக்கமே போகல. கர்நாடக சங்கீதம் சார்ந்த கதையம்சம் இருந்தால் சினிமாவுக்கு இசையமைப்பேன். சினிமா குத்துப்பாடல்களை உருவாக்க

> **“மேடை நிகழ்ச்சியில் நேரடியாக வாசிக்கும் சுகம் எங்கும் கிடைக்காது. மேடையில் கிடைக்கும் திருப்தி, ஆயிரம் சினிமா பாடல்களில்கூட கிடைக்காது”**



எனக்கு தெரியாது. தற்போது, வரும் சினிமா பாடல்களை அவ்வப்போது கேட்பேன். என் மனதுக்கு பிடித்த இசை சினிமா பாடல்களில் இல்லை. அதற்காக இசையமைப்பாளர்களை குற்றம் சொல்லவில்லை. எனக்கு பிடிக்கவில்லை அவ்வளவுதான். சினிமாவைவிட மேடை நிகழ்ச்சிகளில் சுதந்திரமாக என்னுடைய இசையை வாசிக்க முடிகிறது.

**உங்களது இசை படைப்புகள்..?**

நிறைய பக்தி பாடல்களுக்கு இசையமைத்து இருக்கிறேன். என்னுடைய சொந்த பேனரில் 'போட்யூரி', '8 1/2 நாள் ஜெர்னி' இரண்டு கிட்டார் ஆல்பத்தை வெளியிட்டுள்ளேன். மேற்கத்திய இசை பாணியில் 'குறையொன்றும் இல்லை கண்ணா' பாடல், 'பாக்யா தா லட்சுமி பாரம்மா' பாடல் இரண்டையும் கிடாரில் வாசித்துள்ளேன். என்னுடைய சொந்த கற்பனையில் உருவான நூற்றுக்கும் மேற்பட்ட கிட்டார் மியூசிக் உள்ளன. 50க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கிடார் பயிற்சி அளிக்கிறேன். சுப நிகழ்ச்சிகளில் இசைநிகழ்ச்சி நடத்துகிறேன்.